மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

துணை மின் நிலையம்

***22241—திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் நகரத்திலுள்ள கருந்தட்டாங்குடி, விளார் ஆகிய பகுதிகளிலுள்ள 33 கி.வோ. துணை மின் நிலையங்களை 110 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் நகரிலுள்ள கரந்தை (கருந்தட்டாங்குடி) துணை மின் நிலையத்தை 12—வது ஐந்தாண்டு பெருந்திட்டத்திலே 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், விளாரிலுள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

2013 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக உச்ச நீதிமன்றம் வரை சென்று சட்டப் போர் நடத்தி, மத்திய அரசைப் பணிய வைத்து, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வைத்து, விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை மீட்டுத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய பாதுகாவலராக என்றைக்கும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எங்களுடைய காவிரித் தாய், காவிரி காத்த பொன்னியின் செல்வி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை முதலில் தெரிவித்துக்கொண்டு, தஞ்சை தொகுதி, தஞ்சை நகரம் மிகப் பெரிய அளவிலே மக்கள் தொகையால் விரிவடைந்துகொண்டிருக்கின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினால், கரந்தை மற்றும் விளார் பகுதிகளிலே மின் அழுத்தப் பிரச்சினையின் காரணமாக சீரான மின்சாரம் கிடைக்காமல் மக்கள் அவதியுறுகின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கின்ற 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களை 110/11 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருந்தட்டாங்குடியிலும், விளாரிலும் இருக்கின்ற 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களை, 110/11 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். கருந்தட்டாங்குடியிலே மின் பளு தேவை இருக்கின்ற காரணத்தினாலே, 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டத்திலே அது சேர்த்துக்

கொள்ளப்பட்டிருக்கிறது. கருந்தட்டாங்குடியில் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தினை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு இடம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. தரம் உயர்த்தும்போது தேவைப்படும் கூடுதலான இடத்தைக் கையகப்படுத்துவதற்கு வேண்டிய பணிகளையும் தற்போது அரசு செய்து வருகிறது. தற்போது, தஞ்சாவூர், கருந்தட்டாங்குடியில் 2X8=16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இதன் மின் உச்சப் பளு 13/1 எம்.வி.ஏ. ஆகும். இந்தப் பகுதியில் மின் பளு தேவையை நிறைவு செய்ய, கருந்தட்டாங்குடியில் உள்ள மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த, கூடுதல் நிலம் தேவைப்படுகிறது. தக்கார், காஞ்சி மடம் மற்றும் செயல் அலுவலர், பங்காரு காமாட்சியம்மன் கோயில், தஞ்சாவூர் அவர்களுக்குச் சொந்தமான சர்வே எண் 4402/1 மற்றும் 4402/2–ல் உள்ள 4.56 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கீடு பெறத் தேவையான அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், அந்த நிலம் கையகப்படுத்தப்படும். நிலம் கையகப்படுத்தப் பட்டவுடன், அனுமதி பெறப்பட்டு, உடனடியாகப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், விளாரில் 1X8=8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியுடன் 33/11 திறன் கொண்ட மின் நிலையம் இயங்கி வருகிறது. இதன் அதிகபட்ச மின் பளு தேவையே 4/2 எம்.வி.ஏ.–தான். ஆனால், 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றி அங்கு இருப்பதால், இதனைத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை. ஒருவேளை பிற்காலத்தில், விளார் பகுதியில், மின் பளு தேவை அதிகரிப்பின், அதற்கேற்ப அதனைத் தரம் உயர்த்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

2013 மார்ச் 25]

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரந்தை பகுதியிலே புதிய துணை மின் மாற்றியை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தஞ்சை தொகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

47—

தொகுப்பு வீடுகள்

***19682—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் பழுதடைந்துள்ள பழைய தொகுப்பு வீடுகளைச் செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/–க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.